# ***பிறக்கட்டும் மகிழ்ச்சி!***

உலகின் எல்லா மதங்களுமே ஓர் அடிப்படையின் கீழ் இயங்குகின்றன. அந்த அடிப்படை இது தான்: இறைவன் என்பது ஒரு மாபெரும் சக்தி, மனிதரின் பலத்தையெல்லாம் மிஞ்சிய சக்தி, மனிதனால் தானாகத் தனியாக வாழ்ந்து காட்ட இயலாத போது, இறைவன் தான் வாழ்வுக்கு அர்த்தம் தர முடியும். இறைச் சக்தி அருளாக உருவெடுத்து எந்த சமுதாயத்துக்கு ஆசியாக அமைகின்றதோ அந்த சமுதாயமே மாபெரும் காரியங்களை இப்பூவுலகில் சாதித்துக் காட்ட முடியும். எனவே உலகம் அழகும், அர்த்தமும் பெற வேண்டுமானால் இறைவன் மனித உள்ளத்தில் உறைய வேண்டும். இறை-வன் என்றால் உள்ளத்தில் இருப்பவன் என்று அர்த்தம். உள்ளுக்குள் உறையும் இறைவனை முன் வைத்து மனிதன் எடுக்கும் எந்த செயலும் நேரிய வகையில் பயன் தரும்.

எனவே இறைவனுக்கும் மனிதருக்கும் இடையில் உறவு வேண்டும். இறைவனுக்கும் மனிதருக்கும் இடையில் வார்த்தை உருவாக வேண்டும். இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே ஊடகம் வேண்டும். இறைவனால் அல்லாமல் யாரிதைச் செய்ய முடியும்?

இறைவன் எம்மோடு உறவு கொண்டார். இறைவன் ராமனாக அவதரித்தார், புத்தராகப் பிறந்தார், நபிகள் பலரைப் பூவுலகிற்கு அனுப்பி வைத்தார், இறைவாக்கினர்கள் மூலம் உறவாடினார், என்று எல்லா மதங்களுமே எடுத்துரைக்கின்றன. இது உண்மையே. இறைச் சுடர் உள்ளத்தில் விசேச விதமாக ஒளிரும் மனிதர்களை தமிழ்ப் பண்பு அவதாரம் என்கின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறைவனுக்கும் மனிதருக்குமிடையில் பாலம் ஒன்று உருவாகியது. அது எம் உள்ளத்தில் ஊன்றியது. எம்மோடு ஒருவராக ஒன்றிணைந்தது. எம்மில் எம்மாக வாழ்ந்தது. எம் வாழ்விற்குப் பாதை அமைத்தது. இறைவனோடு புது உறவு பிறந்தது, என்பது எம் கிறிஸ்தவர்களின் கூற்று.

இது உண்மையானால், இறைவன் உள்ளத்தில் உயிரோடு இருப்பது எண்பிக்கப் பட வேண்டும். அதன் சுவடுகள் வாழ்வில் தென்பட வேண்டும். இருளின் மத்தியில் ஒளியேற்றப் பட வேண்டும். மகிழ்ச்சி எங்கும் சிதற வேண்டும். அதனால் வாழ்வு பொலிவும் பலமும் பெற வேண்டும்.

இறைவன் ஒளிர்விக்கும் ஒளியாகப் பிறந்தார். நலம் தரும் நற்செய்தியை உரைக்கவும், மனத்தின் விடுதலையைப் பறை சாற்றவும் அவர் முன் வந்தார். தன் வாழ்வையே மனிதருக்கு அர்ப்பணித்தார். எல்லோரும் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமைப் பேற்றைப் பெறச் செய்தார்.

ஏழை மனிதரை வாழ்விக்க இறைவன் குழந்தையாக மீண்டும் பிறக்கும் பண்டிகையைக் கொண்டாட நாம் தயாராகின்றோம். இது மனித குலத்திற்கு இறைவன் தரும் ஓர் அமைதிப் பரிசு. ஒவ்வொரு இதயத்திலும் ஒவ்வொரு குடும்பத்திலும் இறைவன் பிள்ளையாகப் பிறக்கட்டும். அது எங்கள் சமாதானமாய், எங்கள் சந்தோசமாய் இருக்கட்டும்.

அனைவருக்கும் உளங்கனிந்த நத்தார் பெருவிழா வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவில் அன்புடன்,

***Fr. Tiburtius Fernandez***